செ.வெ.எண்.281 நாள்:28.04.2018

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் நடைபெற்ற கிராம சுயாட்சி இயக்க விழாவில் பிரதம மந்திரி வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 3 ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 162 பயனாளிகளுக்கு ரூ.275.40 லட்சம் மதிப்பீட்டிலான வீடுகளின் சாவி மற்றும் உத்தரவுகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.

-----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் கிராம சுயாட்சி இயக்கத்தின் கீழ் பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டத்தில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 3 ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் சாவிகள் பயனாளிகளுக்கு வழங்குதல், வீடுகள் கட்டுவதற்கு பயனாளிகளுக்கு உத்தரவு வழங்குதல் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.04.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு 162 பயனாளிகளுக்கு ரூ.275.40 லட்சம் மதிப்பிலான வீடுகளை வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

ஏழை எளிய மக்களுக்கு சொந்த வீடுகள் கட்ட பிரதம மந்திரி வீடுகள் வழங்கும் திட்டத்தில் மத்திய அரசின் நிதி ரூ.72 ஆயிரமும் மாநில அரசின் நிதி ரூ.98 ஆயிரமும் மொத்தமாக 1 பயனாளிக்கு ரூ.1லட்சத்தி 70 ஆயிரம் வழங்கப்படுகிறது. தமிழக அரசு ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திட மக்களுக்கு நலன் தரும் அதிக திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. ஏழை எளிய வீடு இல்லாத மக்களுக்கு வீடுகள் கட்டி தரும் பிரதம மந்திரி வீடுகள் திட்டத்தில் நமது மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 7742 வீடுகள் கட்ட ஒதுக்கீடு பெறப்பட்டு 2561 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2775 வீடுகள் கட்டுப்பட்டு வருகிறது. இதில் சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட மேலநீலிதநல்லூர், குருவிகுளம், சங்கரன்கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 862 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. 1043 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் வீடுகள் வேண்டுவோர் விண்ணப்பித்தால் உடன் நடவடிக்கை மேற்கொண்டு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவுகள் வழங்கப்படும். இன்று நடைபெறும் விழாவில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 3 ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 88 பயனாளிகளுக்கு கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் சாவிகள் வழங்கப்படுகிறது. மேலும் 74 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவு வழங்கப்படுகிறது. மொத்தம் 162 பயனாளிகளுக்கு ரூ.275.40 லட்சம் மதிப்பிலான வீடுகள் வழங்கப்படுகிறது. அரசின் திட்டங்களை பயன்படுத்தும் நீங்கள் அனைவரும் மற்றவர்களுக்கும் அரசின் திட்டங்களை எடுத்து சொல்லி அவர்களும் பயன்பெற உதவிட வேண்டும் என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, கிராம சுயாட்சி இயக்கம் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.பத்மநாபன், திரு.கலாதரன் முக்கிய பிரமுகர்கள் திரு.சுப்பையாபாண்டியன், திரு.ஆவின் ரமேஷ், திரு.ஆறுமுகம், திரு.வேல்முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கணபதி, திரு.சுப்பிரமணியன், திரு.முத்துபாண்டியன், திரு.சிவகுமார், திருமதி.சந்திரா மற்றும் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.